# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.No.36/2016 . நாள்.07.10.2023**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **பாண்டுரங்கன்** | **வயது** | 47 |
| **த/பெ. க/பெ.** | **ராமமூர்த்தி** | **மதம்** | |
| **முகவரி** | **ஜிம்மாண்டியூர்** | **தொழில்** | Office Assistant, Co–Operative Society |

**வா.சா.1 ஆஜர். முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1, 2 மைனர் வாதிகளின் தந்தை ஆவேன். மைனர் 1, 2 வாதிகளுக்காக தந்தை என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்து தற்போது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டது ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். எங்களது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1) 20.08.2014 ம் தேதியிட்ட ஆவண எண். 1973/2014 தான செட்டில்மென்ட் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 18.04.2016 ம் தேதியிட்ட வாதிகள் பெயரிலான சிட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 24.03.2016 ம் தேதி கந்தாய இரசீதின் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 20.04.2016 ம் தேதியிட்ட 7 ம் பிரதிவாதியால் வழங்கப்பட்ட பதில் அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.